## நமது குறிக்கோள்/ हमारा लक्ष्य

**பாதுகாப்பு / संरक्षा**

**உத்திரவாதம் / आश्वासन**

**காலம் தவறாமை / समय पाबंदी**

**தூய்மை / स्वच्छता**

இந்த புத்தகம் டிராக்மேன் வகை தொழிலாளர்களின் வேலை மேம்பாட்டிற்காக பயிற்சிப் பள்ளியில் தயாரிக்கப்பட்டது. இது எல்லா நிலையஞுகுக்கும் மொத்தமாக தயாரிக்கப்பட்டதல்ல மற்றும் பிற சட்ட திட்டங்கள், மேனுவல் அல்லது வழிகாட்டுதலுக்கு மாற்று சாதனமும் அல்ல.

यह पुस्तिका ट्रेक्मेन वर्ग कर्मचारियों के काम में बढावा लाने के लिए प्रशिक्षण स्कूल में तैयार किया गया है। यह सभी स्टेशनों के लिए संपूर्ण रूप से तैयार नहीं किया गया है और अन्य नीति नियमों ,मैनुअल अथवा मार्गदर्शन का दूसरा साधन भी नहीं है।

महा प्रबंधक/दक्षिण रेलवे के वार्षिक निरीक्षण के दौरान राजभाषा विभाग मदुरै मंडल द्वारा प्रकाशित

**PUBLISHED BY**
**RAJBHASHA ANUBHAG/MADURAI DIVISION**
**During the Annual Inspection of GM/Southern Railway**

दक्षिण रेलवे
SOUTHERN RAILWAY

मदुरै मंडल
MADURAI DIVISION

கோட்ட இருப்புப்பாதை பயிற்சி மையம், மதுரை
मंडल रेल पथ प्रशिक्षण केन्द्र, मदुरै

# மழைக்கால ரோந்து
# बरसात काल पहरा



फरवरी FEBRUARY 2018




15.06.2017
क्षिण रेलवे, मदुरै मंडल
n Railway, Madurai Division
जभाषा कार्यान्वयन समिति की बैठक
eeting of Divisional O.L.I.C.
क / Date 15.06.2017
WASH ROOM


दक्षिण रेलवे
मदुरै मंडल
SOUTHERN RAILWAY
MADURAI DIVISION
हिंदी सप्ताह समारोह
HINDI WEEK CELEBRATIONS


SOUTHERN RAILWAY
MADURAI DIVISION
JURISDICTION MAP

## தொலைபேசி எண் फोन नंबर

B.T.கண்ட்ரோல் : 900 3862 235

**बी टी कंट्रोल** 0452 2308450

பகுதி பொறியாளர்கள்/இருப்புப்பாதை सेक्शन इंजीनियर/रेल पथ

| | | |
|---|---|---|
| 1. | உசிலம்பட்டி उसिलंपट्टि | : 900 3862 212 |
| 2. | திண்டுக்கல் दिंडुक्कल | : 900 3862 213 |
| 3. | மணப்பாறை मणप्पारै | : 900 3862 214 |
| 4. | பழனி पळनी | : 900 3862 215 |
| 5. | பொள்ளாச்சி पोल्लाच्चि | : 900 3862 216 |
| 6. | மதுரை BG मदुरै बीजी | : 900 3862 218 |
| 7. | மதுரை MG मदुरै एम जी | : 900 3862 219 |
| 8. | விருதுநகர் विरुदुनगर | : 900 3862 220 |
| 9. | சிவகாசி शिवकाशी | : 900 3862 221 |
| 10. | மானாமதுரை मानामदुरै | : 900 3862 222 |
| 11. | செங்கோட்டை शेंगोट्टै | : 900 3862 223 |
| 12. | புனலூர் पुनलूर | : 900 3862 224 |
| 13. | புதுக்கோட்டை पुदुक्कोट्टै | : 900 3862 225 |
| 14. | சிவகங்கை शिवगंगा | : 900 3862 226 |
| 15. | மண்டபம் मंडपम | : 900 3862 227 |
| 16. | திருநெல்வேலி तिरुनेलवेली | : 900 3862 228 |
| 17. | தூத்துக்குடி तूत्तुक्कुडि | : 900 3862 229 |
| 18. | ஸ்ரீவைகுண்டம் श्रीवैकुंठम | : 900 3862 230 |

## தென்னக இரயில்வே दक्षिण रेलवे
## மதுரை கோட்டம் मदुरै मंडल

### கோட்ட இருப்புப்பாதை பயிற்சி மையம், மதுரை
### मंडल रेल पथ प्रशिक्षण केन्द्र, मदुरै

# மழைக்கால ரோந்து
# बरसात काल पहरा

1. பெயர் नाम :-
2. பி.எப். நம்பர் भवि. निधि सं. :-
3. பிறந்த தேதி जन्म तिथि :-
4. பீட் நம்பர் बीट सं. :-
5. காங்கி/யூனிட் நம்பர் गैंग/इकाई सं. :-
6. செக்ஷன் सेक्शन :-
7. ஸ்டேசன் स्टेशन :-

# முன்னுரை

தண்டவாளத்தின் பாகங்கள் சரியானபடி இருக்கின்றதா என்றும் தொடர்வண்டி செல்வதற்கு பாதுகாப்பாகவும் தடங்கல் இல்லாமல் இருக்கின்றதா என்றும் உறுதி செய்வதற்கு தண்டவாளத்தில் பெட்ரோலிங் (ரோந்துப் பணிகள்) மேற்கொள்ளப் படுகின்றன.

## இருப்புப்பாதையில் பார்க்கக் கூடிய ரோந்துப் பணிகள்:-

1) கீமேன்தினசரி பெட்ரோல்
2) அதிக மழை / புயல் நேரங்களில் காங்கி பெட்ரோல் (ரோந்து)
3) பாதுகாப்பு பெட்ரோல் (ரோந்து)
4) மழைகால பெட்ரோல் (ரோந்து)
5) நிலையான வாட்ச்மேன்
6) உஷ்ண கால / குளிர்கால பெட்ரோல்

இருப்புப்பாதையின் சில பகுதிகள் அதிக மழை காரணமாக பாதிக்கப்படலாம். அதனால் தொடர்வண்டிக்குப் பாதுகாப்பு இல்லாமல் போகலாம். இதற்காக மழை காலத்தில் இரவு நேர பெட்ரோலிங் திட்டமிட்டபடி குறிப்பிட்ட பகுதிகளில் போடப்படுகிறது. இதன் மூலம் லைனில் வெள்ளத்தால், ஏற்படும் பாதிப்பு லைன் இறங்குதல். அரித்தல் போன்றவற்றை கண்டறிந்து உடனடியாக தொடர் வண்டிக்கு பாதுகாப்பு செய்ய வேண்டிடும்.

## மழை கால பெட்ரோல் போடவேண்டிய காலங்கள்;-

கோட்டப் பொறியாளர் அவர்கள் எந்தெந்த செக்ஷனில் மழைகால பெட்ரோல் போடவேண்டும் என்பதை குறிப்பிட்டு கொடுப்பார்கள், எந்த மாதங்களில் போடப்பட வேண்டும், என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

பொதுவாக அக்டோபர் 1 முதல் ஜனவரி 31 வரை மழைகாலமாகும்.

இந்த மழைக்காலப் பெட்ரோலிங் குறிப்பிட்ட செக்ஷனில் குறிப்பிட்ட காலங்களில் போடப்படவேண்டும். இது புனலூர் மற்றும் செங்கோட்டை செக்ஷனுக்கு மாறுபடும். அவசியம் ஏற்பட்டால் அந்தந்த செக்ஷனில் தேவைக்கு ஏற்றபடி பகுதி பொறியாளர் உத்திரவின்படி ரோந்து பணிகள் மேற்கொள்ளலாம்.

அவசியம் ஏற்பட்டால் அந்தந்த செக்ஷனில் தேவைக்கு ஏற்றபடி பகுதி பொறியாளர் உத்திரவின்படி ரோந்து பணிகள் மேற்கொள்ளலாம்.



# परिचय

पटरी के सभी भाग/अंग सही प्रकार होने तथा गाडी चलने के लिए संरक्षित तथा बिना बाधा के होने की बात को सुनिश्चित करने के लिए पटरियों का पहरा किया जाता है।

## रेल पथ के पेट्रोलिंग/पहरा कार्य:-

1. की-मैन दैनिक पेट्रोल/पहरा
2. अधिक वर्षा/आंधी के दौरान गैंग पेट्रोल/पहरा
3. संरक्षा पेट्रोल/पहरा
4. वर्षा काल पेट्रोल/पहरा
5. स्थायी देखरेख करनेवाला/ वाचमेन
6. गर्मी / सर्दी मौसम का पेट्रोल/पहरा

अधिक वर्षा के कारण रेल पथ के कुछ भाग बाधित हो सकते है। इससे गाडी की संरक्षा को खतरा हो सकता है। इस कारण वर्षा के मौसम में रात पेट्रोलिंग/पहरा कार्य, योजनाबद्ध रूप में विशिष्ट स्थानों पर किए जाते हैं। इसके ज़रिये लाइन में बाढ के कारण होनेवाली बाधाओं को पहचान कर उदाहरणत: लाइन नीचे हो जाना, घिसे-पिटे होना, घटाव होना आदि को पहचानकर गाडी की संरक्षा करनी है।

## वर्षा के मौसम में पेट्रोल / पहरा लगाने का समय:-

किन किन सेक्शनों में, किस महीने के दौरान वर्षा काल पेट्रोल/पहरा करना है, इसके बारे में मंडल इंजीनियर सूचित करेंगे।

सामान्यतः अक्तूबर 1 से जनवरी 31 तक वर्षा काल है। इस वर्षा काल पेट्रोलिंग, सूचित सेक्शन में सूचित समय पर करना है।

यह पुनलूर और शेंगोट्टै सेक्शन के लिए बदलेगा । आवश्यकता पडने पर अपने अपने सेक्शन में यथा आवश्यकतानुसार, सेक्शन इंजीनियर के आदेशानुसार पेट्रोलिंग किया जा सकता है।

## பெட்ரோல் சார்ட் மற்றும் பெட்ரோல் புத்தகம்:-

பெட்ரோல் சார்ட் என்பது ஒரு செக்ஷனில் எவ்வாறு பெட்ரோலிங் செய்யவேண்டும் என்பதை குறிப்பிட்டு, கொடுக்கப்படும் வரை படமாகும்.

இதில் ஒவ்வொரு பகுதியும் தனித்தனி பீட்களாக பிரிக்கப்பட்டிருக்கும். எந்த பெட்ரோல்மேன் எந்த இடத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும் எத்தனை மணிக்கு ஆரம்பிக்கவேண்டும் போன்ற விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

பெட்ரோல் சார்ட் கோட்டப் பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்டு அனைத்து செக்ஷன்கள், உதவி கோட்டப்பொறியாளர் மற்றும் ஸ்டேசன்களுக்கு வழங்கப்படும்.

❖ பொதுவாக பெட்ரோலிங் ஒரு நபர் மட்டும் தான் அனுப்பவேண்டும். முதன்மை பொறியாளர் அனுமதியுடன் மலைப்பகுதிகளில் இரண்டு ஆட்கள் அனுமதிக்கலாம்.

❖ சூர்ய அஸ்தமனத்திலிருந்து சூரிய உதயம் வரை ஓடக்கூடிய அனைத்து பயணிகள் தொடர்வண்டிகளுக்கும் அதிபட்ச பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

❖ இரண்டு ஸ்டேசன்களுக்கு இடையே உள்ள தூரம் ஒரு யூனிட்டாக எடுத்துக் கொள்ளப்பட்டு ஒரே அளவுள்ள பீட்டுகளாக பிரிக்கப்படும். பொதுவாக ஒரு பீட்டின் நீளம் 5 கிலோ மீட்டருக்கு மிகாமல் இருக்க வேண்டும். தூரம் கூடுதலாக இருந்தால் இடையே ஒரு பீட் கொடுக்கப்படும்.

❖ பொதுவாக பெட்ரோல் மேன் நடக்கும் வேகம் ஒரு மணி நேரத்திற்கு 3 கிலோ மீட்டராகும்.

❖ ஒரு டூட்டியில் ஒரு பெட்ரோல் மேன் அதிகபட்சம் 20 கிலோ மீட்டர் நடக்கலாம்.

❖ இரண்டு பீட்களுக்கு இடையே அரைமணி நேரம் ரெஸ்ட் கொடுக்கவேண்டும்.

❖ அதிக வண்டிகள் ஓடும் இடங்களில் ஒரு செட் பெட்ரோல் மேன் எல்லா வண்டிகளையும் கண்காணிக்க இயலாவிட்டால் இரண்டாவது செட் பெட்ரோல் மேன் அறிமுகப்படுத்தலாம்.

❖ பெட்ரோல் சார்ட்டில் நிலையான வாட்சுமேன் போடவேண்டிய மற்றும் ஆபத்தான இடங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.



## पेट्रोल/पहरा चार्ट व पेट्रोल/पहरा पुस्तिका

पेट्रोल/पहरा चार्ट का तात्पर्य है कि उस सेक्शन में पेट्रोलिंग करने के तरीके को, एक नक्शे में अंकित किया जाना है।

इसमें एक एक भाग अलग अलग बीट मे बांटे हुए होंगे। पेट्रोल करनेवाले को कहाँ से शुरु करना है, कितने बजे शुरू करना है जैसे विवरण स्पष्ट दिए होंगे।

पेट्रोल/पहरा चार्ट मंडल इंजीनियर द्वारा तैयार करके सभी सेक्शन, सहायक मंडल इंजीनियर और स्टेशनों को दिया जाएगा।

❖ सामान्यतः पेट्रोलिंग के लिए एक ही व्यक्ति को भेजना है। मुख्य इंजीनियर की अनुमति से घाट सेक्शनों में दो व्यक्तियों को भेजा जा सकता है ।

❖ सूर्यास्त से सूर्योदय तक की सभी यात्री गाडियों के लिए अधिकतम सुरक्षा देना है।

❖ दो स्टेशनों के बीच की दूरी को एक इकाई मानकर, समान दूरी के बीटों में विभाजित किया जाएगा। सामान्यतः एक बीट की लंबाई 5 किलोमीटर से ज्यादा नहीं होनी चाहिए। दूरी ज्यादा होने पर बीच में एक बीट दिया जा सकता है।

❖ सामान्यतः पेट्रोल करनेवालों की पैदल चलने की गति 3किमी प्रति घंटा है।

❖ पेट्रोल करनेवाले एक ड्यूटी में अधिकतम 20 किमी चल सकते हैं।

❖ दो बीट के बीच आधा घंटा विश्राम देना है।

❖ अधिक गाडियाँ चलने वाले स्थानों में पेट्रोल करनेवाले एक सेट सभी गाडियों को ध्यान से न देख पाने पर दूसरा सेट पेट्रोल मेन को लगाया जा सकता है।

❖ पेट्रोल/पहरा चार्ट में स्थायी पहरेदार (वाचमेन) लगाने तथा खतरनाक स्थान अंकित किए होंगे।

## பெட்ரோல் புத்தகங்கள்

- ❖ போதுமான அளவுக்கு பக்கங்கள் கொண்ட பெட்ரோல் புத்தகம் ஒரு தகரப் பெட்டியில் வைத்து பெட்ரோல் மேனுக்கு கொடுக்கப்படும்.
- ❖ ஒவ்வொரு பெட்ரோல் புத்தகமும் வரிசையாக நம்பர் போடப்பட்டிருக்கும்.
- ❖ புத்தகத்தின் முதல் பக்கத்தில் கிலோமீட்டர் மற்றும் பெட்ரோல் மேன் பெயர் எழுதப்பட்டிருக்கும்.
- ❖ மற்ற பக்கங்களின் தேதி, ஸ்டேசன், புறப்படும் நேரம், வரும் நேரம், ஸ்டேசன் மாஸ்டர் கையொப்பம் போன்றவை எழுத இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

## பெட்ரோல்மேன்

- ❖ திறமை, அனுபவம்மிக்க, நம்பிக்கையான மற்றும் பாலங்கள், கிலோமீட்டர் படிக்கத் தெரிந்த ஆட்களை பெட்ரோல் மேனாக நியமிக்கவேண்டும்.
- ❖ வேண்டிய அளவு லீவு / ரெஸ்ட் ஆட்கள் வைத்துக் கொள்ளவேண்டும்.
- ❖ குறிப்பிட்ட அளவு மெடிக்கல் டெஸ்ட் பாஸ் பண்ணிருக்க வேண்டும்.

## பெட்ரோல் மேன் கொண்டு செல்ல வேண்டிய சாமான்கள்

1. நைட் பெட்ரோல் தடி
2. நம்பர் பிளேட்
3. 10 வெடிகள் (டப்பாவுடன்)
4. இரண்டு மூவர்ண கைவிளக்குகள்
5. மழைக்கோட்டு
6. தீப்பெட்டி
7. சிவப்புக்கொடி-2 (பகலில் மட்டும்)
8. பச்சைக்கொடி-1 (பகலில் மட்டும்)
9. ஒரு தகர டப்பாவில் பெட்ரோல் புத்தகம்
10. ஒரு மூன்று செல் டார்ச் லைட்
11. விசில்
12. ஹாவர் சாக்கு பை ஒன்று
13. தீச்சுடர் சிக்னல் ஒன்று
    (இரண்டு லைன் உள்ள இடங்களில் மற்றும் மலைப்பகுதிகளில் மூன்று தீச்சுடர் சிக்னல் கொண்டு செல்லவேண்டும்).



## पेट्रोल/पहरा पुस्तिकाएं

- ❖ पर्याप्त मात्रा में कागज़ के साथ, पेट्रोल पुस्तिका को एक टिन पेटी में रखकर पेट्रोल करनेवालों को दिया जाएगा।
- ❖ प्रत्येक पेट्रोल/पहरा पुस्तिका में क्रमानुसार नंबर लगाए होंगे।
- ❖ पहले पृष्ट में किलोमीटर और पेट्रोल करनेवाले पेट्रोलमेन का नाम लिखा होगा।
- ❖ अन्य पृष्टों में दिनांक, स्टेशन, प्रस्थान का समय, आगमन समय, स्टेशन मास्टर के हस्ताक्षर आदि लिखने के लिए स्थान दिये होंगे।

## पेट्रोल मेन/पहरा करनेवाला

- ❖ निपुण, अनुभवी, विश्वसनीय एवं पुल, किलोमीटर पढना जाननेवालों को पेट्रोल मेन के रूप में नियुक्त करना है।
- ❖ पर्याप्त संख्या में एल आर / आर जी कर्मचारी उपलब्ध होना है।
- ❖ निर्धारित चिकित्सा परीक्षण में उत्तीर्ण होना है।

## पेट्रोल/पहरा करनेवाले ले जाने वाली सामग्रियाँ

1. रात पेट्रोल/पहरा लाठी
2. नंबर प्लेट
3. 10 डेटोनेटर (टिन में)
4. 2 तिरंगा हस्त लैंप
5. रेन कोट
6. माचिस
7. लाल झंडी - 2 (केवल दिन में)
8. हरी झंडी - 1 (केवल दिन में)
9. एक टिन बक्स में पेट्रोल/पहरा पुस्तिका
10. एक तीन सेल वाला टार्च लाइट
11. सीटी
12. एक हेवरसेक थैली
13. एक जलता सिगनल
    (दोहरी लाइन स्थान तथा घाट सेक्शनों मे तीन जलता सिगनल ले जाना है।)

## பெட்ரோல் (ரோந்து பணிகள்)

1) பெட்ரோல் சார்ட்டில் குறிப்பிட்டபடி பெட்ரோல்மேன் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் இருக்கவேண்டும். பீட் ஆரம்பிக்கும் போதும் / முடிக்கும் போது பெட்ரோல் புத்தகத்தை ஸ்டேசன் மாஸ்டரிடம் கொடுக்க வேண்டும்.

2) பெட்ரோல் புத்தகத்தில் ஸ்டேசன் மாஸ்டர் வந்த நேரம் / சென்ற நேரம் குறிப்பிட்டு கையொப்பம் இடுவார். இதை தனது டைரியிலும் குறித்துக் கொள்வார். பெட்ரோல் மேன் சாமான்கள் சரியாக உள்ளதா விளக்குகள் சரியாக எரிகிறதா என்று ஸ்டேசன் மாஸ்டர் சோதனையிடுவார்.

3) பெட்ரோல்மேன் டூட்டி எடுத்து நடந்து சென்று ஒரு பீட் முடிந்தவுடன் சந்திக்கும் இடத்தில் எதிரே வரும் பெட்ரோல்மேனை சந்தித்து அவருடன் பெட்ரோல் புத்தகத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். அதன் பின் வந்த வழியே திரும்பி வரவேண்டும்.

4) பெட்ரோல் மேன் சந்திக்கும் இடத்தை வந்தடைந்ததும் எதிரே வரும் பெட்ரோல்மேன் வரவில்லையென்றால் அந்த பெட்ரோல் மேன் நிலை என்ன என்று அறிய தொடந்து அவரை சந்திக்கும் வரை நடந்து செல்லவேண்டும். இந்த விசயங்களை பெட்ரோல் மேன் அடுத்தநாள் மேஸ்திரியிடம் தெரியப்படுத்த வேண்டும்.

5) பெட்ரோல் மேன் பெட்ரோல் சார்ட்டில் குறிப்பிட்ட சரியான நேரத்திற்கு ஸ்டேசனுக்கு வந்து சேர வேண்டும். 15 நிமிடத்திற்கு மேல் கால தாமதாக வந்தால் ஸ்டேசன் மாஸ்டர் கண்ட்ரோலருக்கு தெரியப்படுத்தி பகலாக இந்தால் 40 கிலோ மீட்டர் காசனும் இரவாக இருந்தால் 15 கிலோமீட்டர் காசனும் எல்லா வண்டிக்கும் கொடுப்பார். பெட்ரோல் மேன் வந்து சேரும்வரை இந்த காசன் ஆர்டர் கொடுப்பார்.

## பெட்ரோல் மேன் கடமைகள்

1) பெட்ரோல் சார்ட்டில் குறிப்பிட்டபடி தன்னுடைய பீட் நீளத்தில் மேலும் கீழும் நடக்கவேண்டும். அவ்வாறு செல்லும்போது எங்காவது மண் அரித்துள்ளதா, லைனில் சேதம் ஏற்பட்டுள்ளதா, மரங்கள் எங்காவது சாய்ந்துள்ளதா அது லைனுக்கு பாதிப்பை ஏற்படுத்துமா என கவனிக்க வேண்டும். பாலங்கள் மற்றும் அதன் அப்ரோச்களை குறிப்பாக



## पेट्रोलिंग (पहरा)

1. पेट्रोल/पहरा चार्ट में बताए अनुसार पेट्रोल मेन को सूचित स्थान पर सूचित समय पर रहना है। बीट प्रारंभ होते/ समाप्त होते समय पेट्रोल / पहरा पुस्तिका को स्टेशन मास्टर को देना है।

2. पेट्रोल/पहरा पुस्तिका में स्टेशन मास्टर आने का समय/जाने का समय दर्ज करके हस्ताक्षर करेंगे। इसे अपनी डायरी में भी दर्ज करेंगे। पेट्रोल मेन के सामान सब ठीक है या नहीं, बत्ती ठीक प्रकार जल रही है या नहीं आदि बातें स्टेशन मास्टर चेक करेंगे।

3. पेट्रोल मेन ड्यूटी शुरू करके पैदल चलकर एक बीट पूरा करने के स्थान पर, सामने आनेवाले पेट्रोल मेन से मिलकर उनसे पेट्रोल/पहरा पुस्तिका विनिमय करेंगे। उसके बाद जिस रास्ते से वे आए उसी रास्ते में उनको वापस चले जाना है।

4. दूसरी छोर से पेट्रोल मेन से मिलने के स्थान पर, उनके न आने पर, उस पेट्रोलमेन की स्थिति जानने के लिए उनसे मिलने तक आगे चलते रहना है। इस बात को पेट्रोल मेन को अगले दिन मेस्त्री को सूचित करना है।

5. पेट्रोल मेन को, पेट्रोल/पहरा चार्ट में बताए अनुसार सही समय पर स्टेशन पहुँचना है। 15 मिनट के बाद भी न आने पर, स्टेशन मास्टर कंट्रोल को सूचित करके, सभी गाडियों को दिन हो तो 40 किलोमीटर प्रति घंटे का सतर्कता आदेश और रात हो तो 15 किमी प्रति घंटे का सतर्कता आदेश जारी करेंगे। पेट्रोल मेन के आने तक इसी सतर्कता आदेश को देते रहेंगे।

## पेट्रोल मेन के कर्तव्य

1) पेट्रोल/पहरा चार्ट में बताए अनुसार अपने बीट की लंबाई पर एक छोर से दूसरे छोर तक आगे पीछे पैदल चलना है। इस प्रकार चलते समय कहीं भी मिट्टी एरोड हुआ है, लाइन में कोई बाधा हुई है, पेड कहीं झुका है या गिरा है जिससे क्या लाइन बाधित होगा आदि बातों को देखना है। पुल और उसके अप्रोचों को ध्यान से देखना है।

2) கீழே கண்டவை லைனுக்கு ஆபத்தை விளைவிக் கூடியவைகள் ஆகும்.

- பாலத்தில் தண்ணீர் சிவப்பு குறியைத் தாண்டிச் செல்தல்.
- தண்ணீர் சிவப்பு குறியைத் தொடாவிட்டாலும் பாலத்தின் பாகங்கள் சேதமடைதல்
- ரயில்வே கரையில் ஒருபக்கம் மட்டும் தண்ணீர் உயர்ந்து மறுபக்கம் தண்ணீர் இல்லாமல் இருத்தல்.
- பாலங்களில் தண்ணீர் செல்லாமல் மரங்கள் போன்றவை அடைத்திருத்தல்.
- லைன் மழையின் காரணமாக இறங்கி இருத்தல். மேலே குறிப்பிட்டவைகளை கண்டால் உடனே லைனில் பாதுகாப்பு செய்யவேண்டும்.

3) லைனில் மழை அல்லது வெள்ளம் காரணமாக வண்டி விட முடியாத அளவுக்கு எங்காவது பாதிப்பு ஏற்பட்டிருந்தால் உடனடியாக வண்டியை நிறுத்த வேண்டும்.

4) லைனில் எந்த ஆபத்தும் இல்லை நன்றாக உள்ளது என்றால் லைனில் இடதுபக்கம் நடைபாதையில் நின்று டிரைவருக்கு நம்பர் பிளேட் காண்பித்து நம்பர் பிளேட் தெரியுமாறு லைட்டை பிடித்துக் கொண்டு வண்டி தன்னை கடந்து செல்லும் வரை விசில் அடித்துக் கொண்டு நிற்கவேண்டும்.

5) பீட் ஆரம்பிக்கும் போது முடியும் போதும் குறிப்பிட்ட நேரத்தில் ஸ்டேசன் மாஸ்டரிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டு பெட்ரோல் புத்தகத்தை எதிரே வரும் பெட்ரோல் மேனிடம் மாற்றிக் கொள்ளவேண்டும்.

6) பெட்ரோல் மேன் லைனில் பார்வையிட்ட விசயங்களை எதிரே வரும் பெட்ரோல்மேனிடம் மற்றும் நிலையான வாட்சுமேனிடம் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

7) டிரைவர்கள் ஏதாவது குறிப்புகள் கொடுத்தால் உடனடியாகஅந்த கிலோ மீட்டருக்கு சென்று வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.



2) निम्नलिखित बातें लाइन को खतरा पहुँचा सकता हैं:–

- पुल में लाल मार्क से ज्यादा पानी बहना
- पुल में लाल मार्क से ज्यादा पानी न होने पर या न छूने पर भी पुल के भाग में नुकसान होना
- रेलवे तट पर एक ओर पानी अधिक होकर और दूसरी ओर पानी न रहना
- पुल में पानी के बहाव को रोकते हुए पेड पौधे रहना
- लाइन - वर्षा के कारण नीचे उतरना उपरोक्तों को देखने पर तुरंत लाइन की सुरक्षा करनी है।

3) लाइन में वर्षा या बाढ के कारण गाडी न चलने की स्थिति कहीं हो तो तुरंत गाडी को रोकना है।

4) लाइन में कोई खतरा नहीं और वह ठीक है तो लाइन के बाएं ओर खडे होकर ड्राइवर को नंबर प्लेट दर्शाकर नंबर प्लेट दिखाई देने की तरह लाइट को पकडकर, गाडी को उसे पार करने तक सीटी बजाते हुए खडे रहना है।

5) बीट के प्रारंभ में तथा समाप्ति पर सूचित समय पर स्टेशन मास्टर से हस्ताक्षर प्राप्त कर पेट्रोल/पहरा पुस्तिका को सामने आने वाले पेट्रोलमेन से विनिमय करना है।

6) पेट्रोलमेन लाइन में देखी गई बातों को सामने आनेवाले पेट्रोलमेन तथा स्थायी पहरेदार / वाचमेन को सूचित करना है।

7) ड्राइवर द्वारा कोई संदेश देने पर तुरंत उस किलोमीटर तक जाकर आवश्यक कार्रवाई करनी है।

## லைனில் ஆபத்து ஏதுவும் தென்பட்டால் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள்:-

1) வண்டி வரும் திசையில் முதலில் ஒரு சிவப்பு விளக்கு இரவிலும் அல்லது சிவப்பு கொடி பகலிலும் வண்டிக்கு தெரியும்படி ஊன்றிவிட்டு பின் வண்டிவராத திசையில் அதேபோல் ஊன்றிவிட்டு பின் வண்டி வரும் திசையில் ஊன்றிய சிவப்பு விளக்கை / சிவப்பு கொடியை எடுத்துக் கொண்டு வண்டி வரும் திசையில் சிவப்பு விளக்கை / சிவப்பு கொடியை தலைக்கு மேல் தூக்கிக் காட்டிக்கொண்டு 600 மீட்டரில் ஒரு வெடி கட்டிவிட்டு மீண்டும் 600மீட்டர் ஓடி மூன்று வெடிகளை மையம் மாறுதலாக 10 மீட்டர் இடைவெளிவிட்டு முக்கோண வடிவத்தில் கட்டிவிட்டு திரும்பி வரும் போது 600 மீட்டரில் முதலில் கட்டிய ஒரு வெடியை கையில் எடுத்துக் கொண்டு வந்து வண்டி வரும் திசையில் எடுத்த சிவப்பு விளக்கு / சிவப்பு கொடியை ஊன்றி விட்டு வண்டி வராத திசையில் ஊன்றிய சிவப்பு விளக்கு / சிவப்பு கொடியை எடுத்துக்கொண்டு மேற்கூறிய படி பாதுகாப்பு செய்துவிட்டு ஆபத்தான இடத்தில் வந்து மேல் நடவடிக்கைகளை தொடரவேண்டும்.

- பாதுகாப்பு செய்யும் போது எதிரே வண்டி வந்தால் எந்த இடத்தில் வண்டி தென்படுகிறதோ அந்த இடத்தில் வெடி கட்ட வேண்டும்.
- பெட்ரோல்மேன் லைனில் நடந்து செல்லும் போது லைனில் தடங்கல் ஏற்பட்டு தொடர்ந்து அவர் நடந்து செல்ல முடியாத நிலையில் அதாவது தடங்களை கடந்து அவர் மேற்கொண்டு செல்ல முடியாத நிலையில் அதாவது லைனில் அரிப்பு ஏற்பட்டாலோ அல்லது பாலங்கள் ஏதும் உடைந்து தடங்கல் ஏற்பட்டாலோ அந்த சூழ்நிலையில் எதிரோ வரும் வண்டியை நிறுத்துவதற்காக சிவப்பு கொடி / சிவப்பு விளக்கை அதிக தூரம் தெரியும் அளவுக்கு லைனில் ஊன்றி வைக்க வேண்டும்.
- பின்பு எதிர் திசையில் பாதுகாப்பு செய்ய வேண்டும்.

## இரண்டு லைன் உள்ள இடங்களில் பாதுகாப்பு செய்தல்:-

முதலில் வண்டி வரும் லைனில் பாதுகாப்பு செய்துவிட்டு பின்பு அடுத்த லைனில் வண்டிவரும் திசையில் மேற்கூறிபடி பாதுகாப்பு செய்யவேண்டும்.

பாதுகாப்பு வேலைகளை முடித்து விட்டு பெட்ரோல்மேன் ஆபத்தான இடத்தில் இருந்து கொண்டு ஸ்டேசன் மாஸ்ட்டருக்கு தகவல் தெரியப்படுத்தவேண்டும்.



## लाइन में खतरा देखे जाने पर की जाने वाली कार्रवाई

1) आवक गाडी की दिशा में दिन हो तो लाल झंडी और रात हो तो लाल लैंप रखकर, फिर गाडी न आनेवाली दिशा में इसी प्रकार रखकर, उसके बाद गाडी आ रही दिशा में रखी गई लैंप और झंडी को निकाल कर, गाडी आ रही दिशा में लाल लैंप/लाल झंडी को सर के ऊपर दिखाते हुए दौडकर, रास्ते में 600 मीटर पर एक डेटोनेटर रखकर, उसके बाद पुनः 600 मीटर तक दौडकर तीन डेटोनेटर को दस मीटर की दूरी पर केंद्र परिवर्तित करके त्रिकोण रूप में रखकर वापस आते समय 600 मीटर पर, गाडी न आरही दिशा में,पहले रखी गई डेटोनेटर को निकालकर, लाकर, गाडी आनेवाली दिशा में लिए गए लाल लैंप/झंडी को रखकर गाडी न आ रही दिशा में रखी गई लाल लैंप /झंडी को लेकर दौडकर उपरोक्तानुसार सुरक्षित करके, खतरनाक स्थल पर आगे की कार्रवाई करनी है।

- सुरक्षित करते समय सामने गाडी आने की स्थिति पर जिस स्थान पर गाडी दिखाई दे उसी स्थान पर डेटेनेटर को बांधना है।
- पेट्रोलमेन लाइन पर चलते समय, लाइन में अवरोध हो जाने पर उनके आगे चलने में रुकावट होने पर, उनके लाइन में एरोशन हुए या पुल कहीं टूटने से रुकावट हो जाने पर, उस परिस्थिति में सामने आ रही गाडी को रोकने के लिए लाल झंडी/लाल लैंप को ज्यादा दूरी तक दिखाई देने के स्थान पर, लाइन में रखना है।
- उसके बाद सामने की दिशा को सुरक्षित करना है।

## दोहरी लाइन में सुरक्षित करना:-

पहले गाडी आ रही लाइन को सुरक्षित करने के बाद, दूसरी लाइन में गाडी आ रही दिशा में उपरोक्तानुसार सुरक्षित करना है।

सुरक्षा काम को पूरा करने के बाद पेट्रोलमेन खतरा स्थल पर रहते हुए, स्टेशन मास्टर को सूचित करेंगे।

## இரண்டு பெட்ரோல் மேன் நடக்கும்போது பாதுகாப்பு செய்தல்

- சிவப்பு விளக்கு/சிவப்பு கொடியை ஆபத்தான இடத்தில் இரண்டு புறமும் முதலில் காண்பிக்கவேண்டும்.
- பின் இரண்டு பெட்ரோல்மேனும் எதிர் எதிரே ஓடி 600 மீட்டர் பாதையில் ஒரு வெடி கட்டிவிட்டு மீண்டும் 600 மீட்டர் ஓடி மூன்று வெடிகளை 10 மீட்டர் இடைவெளி விட்டு முக்கோணவடித்தில் மையம் மாறுதலாக கட்டிவிட்டு திரும்வரும் போது 600 மீட்டரில் முதலில் கட்டிய ஒரு வெடியை கையில் எடுத்துக்கொண்டு ஆபத்தான இடத்தில் வந்து இருபுறமும் சிவப்பு விளக்கு/சிவப்பு கொடியை போட்டு நிற்க வேண்டும்.
- இரண்டு லைன் உள்ள இடங்களில் வண்டி எதிர் பார்க்கும் திசைகளில் பாதுகாப்பு செய்யவேண்டும்.
- தடங்கல்கடக்க இயலாத நிலையில் இருந்தால் சிவப்பு விளக்கு அல்லது சிவப்பு கொடியை காண்பித்து வண்டியை நிறுத்த முயற்சி செய்ய வேண்டும் அடுத்த பெட்ரோல்மேன் எப்போதும் போல் பாதுகாப்பு செய்ய வேண்டும்.
- பாதுகாப்பு செய்து முடித்ததும் ஆபத்தான இடத்தில் வந்து இருந்து கொண்டு ஸ்டேசன் மாஸ்ட்டருக்கு ஒரு பெட்ரோல்மேன் சென்று தகவல் கொடுக்க வேண்டும். அடுத்த பெட்ரோல் மேன் ஆபத்தான இடத்தில் நிற்க வேண்டும்.



## दो पेट्रोलमैन चलते समय सुरक्षित करना

- लाल लैंप/लाल झंडी को पहले खतरा स्थल के दोनों ओर दिखाना है।
- उसके बाद दो पेट्रोलमेन आमने सामने 600 मीटर दौडकर 600 मीटर पर एक डेटोनेटर रखकर उसके बाद पुनः 600 मीटर तक दौडकर तीन डेटोनेटरों को त्रिकोण रूप में केंद्र परिवर्तित करते हुए बांधने के बाद, वापस आते समय 600 पर पहले रखे गए डेटोनेटर को हाथ में लेकर, खतरा स्थल पर आकर दोनों ओर लाल लैंप/लाल झंडी रखकर खडे होना है।
- दोहरी लाइन स्थानों में गाडी अपेक्षित दिशा में सुरक्षित करना है।
- अवरोध पार न किये जाने की स्थिति में,लाल लैंप अथवा लाल झंडी दर्शाकर, गाडी को रोकने का प्रयास करना है। अगले पेट्रोलमेन हमेशा की तरह सुरक्षित करना है।
- सुरक्षा कार्य पूरा होने पर,खतरा स्थल पर रहते हुए, स्टेशन मास्टर को एक पेट्रोलमेन जाकर सूचना देंगे, दूसरा पेट्रोलमेन खतरा स्थल पर रहेंगे।

# பெட்ரோல் சார்ட் पहरा चार्ट








பெட்ரோல் மேன் லைனை கடந்து செல்ல முடியாத அளவுக்கு லைன் பாதிப்படைதல்

पेट्रोलमेन लाइन को पार न करने की स्थिति तक बाधित होना

## தடங்கல் உள்ள இடத்தில் பாதுகாப்பு செய்தல்

## अवरुद्ध स्थल पर सुरक्षा करना






## இரண்டு லைன் உள்ள இடத்தில் பாதுகாப்பு செய்தல்

## दोहरी लाइन स्थल पर सुरक्षा करना

